DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC.97 / 2014 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 5 |
| Name | திரு. ராஜா |
| Father Name | கிருஷ்ணன் |
| Village | சிவகளை |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

**(பிரிவு 299 ( 3) ன் படி சமூக நீதிமன்றத்தால் சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது. )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 29-04-2026.(நேரம்: 02.55 PM )**

**முதல்விசாரணை**

1.நான் தற்போது சிவகளையில் குடியிருந்து வருகிறேன்.
2. நான் கூலி வேலை செய்து வருகிறேன்.
3. சாட்சி ரமேசை எனக்கு தெரியும்.
4.என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள ராஜா என்ற கையொப்பம் என்னுடையது இல்லை.
5. வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது.
6. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அ.சா 5 சாட்சியானவர் அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளிப்பதால் அவரை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி வாய்மொழி விண்ணப்பம் அரசு தரப்பில் செய்யப்பட்டது. அ.சா 5ன் சாட்சியை பரிசிலனை செய்ததில் அவர் அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியம் அளித்ததாக அறிய முடிவதால் அவரை பிறழ் சாட்சியாக இந்த

நீதிமன்றம் அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்புக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 06.01.2013 ஆம் தேதி மாலை 06.00 மணிக்கு நானும், சாட்சி ரமேசும் வழக்கு சம்பவ இடத்தின் முன்பு நின்றுக்கொண்டடிருந்தபோது போலிசார் எங்கள் முன்னிலையில் வழக்கு சம்பவ இடத்தையும் அதன் சுற்றுபுறத்தையும் பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி விவரத்திற்கு நாங்கள் சாட்சிகளாக இருந்து கையொப்பம் செய்தோம் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரி ஒரே ஊர்காரர் என்பதால் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.